மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.03/2020
இ.ம.எண்.02/2019
அ.வ.எண்.66/2019

1. மாரியம்மாள்
2. ராமலிங்கம்
3. பெரியண்ணன் ...மனுதாரர்கள்/1 முதல் 3 ம்பிரதிவாதிகள்

/எதிராக/

வரதராஜன் (எ) வரதராஜு ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 03.11.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.எம்.சி.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஐ.கே.சதாசிவம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் எதிர்மனுதாரர்/வாதி இ.ம.எண்.02/2019 ல் குறியீடு செய்யப்பட்டுள்ள குறுந்தகட்டினை மனுதாரர்கள்/ 1 முதல் 3 ம்பிரதிவாதிகளுக்கு வழங்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

இவ்வழக்கில் இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் கோரி இ.ம.எண்.02/2019 ல் குறுந்தகடு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குறுந்தகட்டினை மனுதாரர்களுக்கு வழங்காமல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய சாட்சிய சட்டப்படியும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு வழிச்சட்டப்படியும், நீதிமன்றத்தில் ஒரு தரப்பினரால்

தாக்கல் செய்யப்படும் குறுந்தகட்டினை மறு தரப்பினருக்கும் வழங்குவது கட்டாயமென்று தீர்ப்பு அளித்துள்ளது. எனவே எதிர்மனுதாரர்/வாதி இ.ம.எண்.02/2019 ல் குறியீடு செய்யப்பட்டுள்ள குறுந்தகட்டினை மனுதாரர்கள்/ 1 முதல் 3 ம்பிரதிவாதிகளுக்கு வழங்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) <u>எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர்கள் தரப்பில் குறுந்தகடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை. குறுந்தகடு என்பது நகல் எடுக்க இயலாத நிலையில் மனுதாரர்களுக்கு நகல் வழங்க இயலவில்லை. மனுதாரர்கள் கூறுவது போல் எந்த ஒரு சட்டத்திலும் குறுந்தகட்டினை மறு தரப்பினருக்கு நகல் வழங்குவது கட்டாயம் என்று கூறவில்லை. மனுதாரர்கள் நகல்மனு தாக்கல் செய்து தங்களுக்கு வேண்டிய ஆவணங்களில் நகல்களை பெற்றுக் கொள்ளலாம். அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது ஏதாவது இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் மட்டுமே தாவாவுடன் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களின் நகல்களை எதிர்தரப்பினருக்கு வழங்கவேண்டும் என்று திருத்தப்பட்ட உரிமையியல் நடைமுறை சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் போட்டோ ஸ்டுடியோவில் பெறப்பட்ட அசல் குறுந்தகட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார். எதிர்மனுதாரர் வசம் குறுந்தகட்டின் நகல் எதுவும் இல்லை. மேலும் நகல் எடுக்க முடியாத ஆவணத்தின் நகலை மனுதாரர்கள் கோருவது சட்டப்படியான செயல் அல்ல. இடைக்கால மனுவினை ஒரு முடிவிற்கு கொண்டுவரக்கூடாது என்பதன் அடிப்படையில் மனுதாரர்கள் பொய்யான வாதுரைகளை முன்வைத்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர். எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கில் இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் கோரி இ.ம.எண்.02/2019 ல் குறுந்தகடு குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி குறுந்தகட்டினை மனுதாரர்களுக்கு வழங்காமல் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும், இந்திய சாட்சிய சட்டப்படியும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு வழிச்சட்டப்படியும், நீதிமன்றத்தில் ஒரு தரப்பினரால் தாக்கல் செய்யப்படும் குறுந்தகட்டினை மறு தரப்பினருக்கும் வழங்குவது கட்டாயமென்று தீர்ப்பு செய்துள்ளது எனவும், எனவே எதிர்மனுதாரர்/வாதி இ.ம.எண்.02/2019 ல் குறியீடு செய்யப்பட்டுள்ள குறுந்தகட்டினை மனுதாரர்கள்/ 1 முதல் 3 ம்பிரதிவாதிகளுக்கு வழங்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் தரப்பில் குறுந்தகடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை எனவும், குறுந்தகடு என்பது நகல் எடுக்க இயலாத நிலையில் மனுதாரர்களுக்கு நகல் வழங்க இயலவில்லை எனவும், மனுதாரர்கள் கூறுவது போல் எந்த ஒரு சட்டத்திலும் குறுந்தகட்டினை மறு தரப்பினருக்கு நகல் வழங்குவது கட்டாயம் என்று கூறவில்லை எனவும், மனுதாரர்கள் நகல்மனு தாக்கல் செய்து தங்களுக்கு வேண்டிய ஆவணங்களில் நகல்களை பெற்றுக் கொள்ளலாம் எனவும், அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது ஏதாவது இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் மட்டுமே தாவாவுடன் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களின் நகல்களை எதிர்தரப்பினருக்கு வழங்கவேண்டும் என்று திருத்தப்பட்ட உரிமையியல் நடைமுறை சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் எதிர்மனுதாரர் போட்டோ ஸ்டுடியோவில் பெறப்பட்ட அசல் குறுந்தகட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார் எனவும், எதிர்மனுதாரர் வசம் குறுந்தகட்டின் நகல் எதுவும் இல்லை எனவும், மேலும் நகல் எடுக்க முடியாத ஆவணத்தின் நகலை மனுதாரர்கள் கோருவது சட்டப்படியான செயல் அல்ல எனவும், இடைக்கால மனுவினை ஒரு முடிவிற்கு கொண்டுவரக்கூடாது என்பதன் அடிப்படையில்

மனுதாரர்கள் பொய்யான வாதுரைகளை முன்வைத்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) மனுதாரர் வழக்கறிஞர் கீழ்கண்ட முன்தீர்ப்பை மேற்கோள் காட்டி குறுந்தகட்டினை மனுதாரர்களுக்கு வழங்க வேண்டுமென வாதிட்டார்.

CRL .O.P.No.19706 of 2017 and CRL.MP.No.11883 of 2017

G.Arun @ Arunkumar Vs. The State Rep. by the Inspector of Police

" In view of 65(b) of the Section of Indian Evidence Act read along with the above said two judgments, I am of the view of that the copies of the Compact Disc sought for by the petitioner cannot be deemed to be a material object and that the petitioner is entitled for a copy of the Compact Disc under Section 207 of Cr.P.C."

(iv) எதிர்மனுதாரர் வழக்கறிஞர் எதிருரையில் கூறியுள்ள காரணத்திற்காக மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

(v) மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்திய முன்தீர்ப்பு குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பாகும். குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207ன்கீழ் எதிரிக்கு குறுந்தகடு உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் வழங்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆகவே அதன் அடிப்படையில் குறுந்தகடும் எதிரிக்கு வழங்கப்பட வேண்டுமென மேற்படி முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் இல்லாத நிலையிலும், குற்றவியல் நடைமுறைச்சட்டம் உரிமையியல் வழக்குகளுக்கு பொருந்தாது என்பதாலும் மேற்கண்ட முன்தீர்ப்பு இம்மனுவிற்கு பொருந்தாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) வழக்கு ஆவணங்களிலிருந்து எதிர்மனுதாரர் தாக்கல் செய்த இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய இ.ம.எண்.02/20ல் புகைப்படம் மற்றும் குறுந்தகடு ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்

கட்டளை 39 விதி 3ல் கூறியுள்ளதை தவிர வேறு எந்தவொரு சட்டப்பிரிவும் எதிர்தரப்பினருக்கு ஆவணங்களின் நகலை வழங்க வேண்டும் என கூறவில்லை. எதிர்மனுதாரருக்கு ஒரு ஆவணத்தின் நகல் தேவைப்பட்டால் அதனை மனு தாக்கல் செய்து சான்றிட்ட நகலை பெற்றுக்கொள்ளலாம். ஆகவே எதிர்மனுதாரருக்கு ஆவணத்தின் நகலை வழங்க எந்தவொரு சட்டப்பிரிவும் கூறாதநிலையில் குறுந்தகட்டினை மனுதாரர்களுக்கு வழங்கவேண்டும் என கூறுவது ஏற்புடையதல்ல என முடிவு செய்தும், மனுதாரர்கள் இ.ம.எண்.02/20 யை காலதாமதப்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.